9. கூடுதல் செலவிற்கான மானியக் கோரிக்கைகள் (முதல்), 2019–2020, வாக்கெடுப்பு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *2019–2020 ஆம் ஆண்டின் கூடுதல் செலவிற்கான மானியக் கோரிக்கைகள்மீது வாக்கெடுப்பு. மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

“2019–2020 ஆம் ஆண்டிற்கான கூடுதல் செலவிற்கான மானியக் கோரிக்கைகள் அடங்கிய 20–7–2019 ஆம் தேதியிடப்பெற்ற அறிவிப்பில் குறிப்பிடப்பெற்றுள்ள முதல் துணை மானியக் கோரிக்கைகள் ஒவ்வொன்றிற்கும் எதிரே குறிப்பிடப்பெற்றுள்ள தொகைகளுக்கு மேற்படாத தொகைகள், 2019–2020 ஆம் ஆண்டிற்கான கூடுதல் செலவினங்களுக்காக அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்”

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.*

ஏற்போர் ‘ஆம்’ என்க. (ஆம்)

மறுப்போர் ‘இல்லை’ என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

அரசுக்குக் கோரிய தொகைகள் வழங்கப்பெறுகின்றன.

நிறைவேற்றப்பெற்ற 2019–2020 ஆம் ஆண்டிற்கான கூடுதல் செலவிற்கான மானியக் கோரிக்கைகள்

கோரிக்கை		(ரூபாய் ஆயிரத்தில்)		
		வருவாய்	மூலதனம்	கடன்
1.	மாநிலச் சட்டமன்றம்	61,64,64	..	1
2.	ஆளுநர் மற்றும் அமைச்சரவை	44,61,03	..	..

கோரிக்கை		(ரூபாய் ஆயிரத்தில்)		
		வருவாய்	மூலதனம்	கடன்
3.	நீதி நிருவாகம்	1,021,15,36	..	..
4.	ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை	3,668,18,24	128,02,50	7,11
5.	வேளாண்மைத் துறை	10,001,41,49	418,68,03	130,75,00
6.	கால்நடை பராமரிப்பு (கால்நடை பராமரிப்பு, பால் வளம் மற்றும் மீன் வளத் துறை)	1,191,91,83	60,48,62	1
7.	மீன் வளம் (கால்நடை பராமரிப்பு, பால் வளம் மற்றும் மீன் வளத் துறை)	581,55,99	346,28,92	..
8.	பால் வளம் (கால்நடை பராமரிப்பு, பால் வளம் மற்றும் மீன் வளத் துறை)	58,44,97	200,00,01	..
9.	பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை	902,86,71	7,10,22	1
10.	வணிக வரிகள் (வணிக வரி மற்றும் பதிவுத் துறை)	386,10,69	..	1
11.	முத்திரைத்தாள்கள் மற்றும் பத்திரப் பதிவு (வணிக வரி மற்றும் பதிவுத் துறை)	352,52,87	..	..

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

கோரிக்கை		(ரூபாய் ஆயிரத்தில்)		
		வருவாய்	மூலதனம்	கடன்
12.	கூட்டுறவு (கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை)	1,608,68,59	36,07,21	11,43,50
13.	உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு (கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை)	6,159,89,17	481,31,00	..
14.	எரிசக்தித் துறை	9,217,85,17	563,71,25	660,95,81
15.	சுற்றுச்சூழல் (சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறை)	11,77,50	1	20,00,01
16.	நிதித் துறை	1,689,89,61	770,00,01	131,22,04
17.	கைத்தறி மற்றும் துணிநூல் (கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த் துறை)	1,169,55,58	1	1,00,07
18.	கதர், கிராமத் தொழில்கள் மற்றும் கைவினைப் பொருட்கள் (கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த் துறை)	211,11,30	..	1
19.	மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை	11,888,20,43	674,27,14	1
20.	உயர் கல்வித் துறை	4,378,14,13	206,06,54	2
21.	நெடுஞ்சாலைகள் மற்றும் சிறுதுறைமுகங்கள் துறை	1,564,77,17	12,040,42,14	1

கோரிக்கை		(ரூபாய் ஆயிரத்தில்)		
		வருவாய்	மூலதனம்	கடன்
22.	காவல் (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை)	7,645,13,38	430,83,69	5,00,03
23.	தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை)	352,80,08	50,96,39	1
24.	சிறைச்சாலைகள் (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை)	319,92,29	3	..
25.	இயக்கூர்திகள் குறித்த சட்டங்கள்— நிருவாகம் (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை)	323,71,31	1	..
26.	வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை	3,315,39,78	859,12,14	2,091,00,03
27.	தொழில் துறை	2,647,95,42	3	100,00,07
28.	செய்தி மற்றும் விளம்பரம் (தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை)	91,74,54	1	..
29.	சுற்றுலா-கலை மற்றும் பண்பாடு (சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை)	112,00,59	161,95,10	1
30.	எழுதுபொருள் மற்றும் அச்சு (தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை)	130,95,78	4	..

கோரிக்கை		(ரூபாய் ஆயிரத்தில்)		
		வருவாய்	மூலதனம்	கடன்
31.	தகவல் தொழில்நுட்பவியல் துறை	140,61,81	1	1
32.	தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை	1,367,42,47	71,98,13	1
33.	சட்டத் துறை	30,85,09	..	1
34.	நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை	10,698,42,83	7,482,90,11	519,31,08
35.	பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை	106,70,11	1	50,00
36.	திட்டம், வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் துறை	208,23,55	173,87,03	8,00
37.	மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை)	133,09,87	..	..
38.	பொதுத் துறை	808,53,70	2	5,50,00
39.	கட்டடங்கள் (பொதுப் பணித் துறை)	281,58,17	1,004,65,06	1
40.	பாசனம் (பொதுப் பணித் துறை)	2,092,26,83	3,830,54,83	..
41.	வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை	6,106,94,21	75	1
42.	ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை	16,478,13,04	1,795,47,89	35,00

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

கோரிக்கை		(ரூபாய் ஆயிரத்தில்)		
		வருவாய்	மூலதனம்	கடன்
43.	பள்ளிக் கல்வித் துறை	28,573,01,21	384,31,47	29,51
44.	குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை	405,26,16	71,00,00	1
45.	சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை	5,271,98,18	33,53,14	2
46.	தமிழ் வளர்ச்சி (தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை)	54,75,61	..	1
47.	இந்து சமய அறநிலையத் துறை (சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை)	278,86,41	..	..
48.	போக்குவரத்துத் துறை	1,152,82,90	145,00,04	10
49.	இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை	165,41,19	2,85,75	1
50.	ஓய்வூதியங்களும், ஏனைய ஓய்வுக்கால நன்மைகளும்	32,393,00,00	..	..
51.	இயற்கைச் சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு	835,01,36	..	..
52.	மாற்றுத் திறனாளிகள் நலத் துறை	569,17,19	3,01,56	1

கோரிக்கை		(ரூபாய் ஆயிரத்தில்)		
		வருவாய்	மூலதனம்	கடன்
53.	சிறப்புத் திட்ட செயலாக்கத் துறை	1,365,39,87	..	1
54.	வனம் (சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறை)	346,58,98	98,45,58	..
	பெருமொத்தம்	180,974,06,38	32,532,92,43	3,677,47,59

7. அறிவிப்புகள்—தொடர்ச்சி

(இ) தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண் 4) சட்டமுன்வடிவு, 2019 (ஆ.இ.)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவைக்கு ஓர் அறிவிப்பு. 2019 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண் 4) சட்டமுன்வடிவைப் பேரவையில் அறிமுகம் செய்யவும், ஆய்வு செய்யவும் மேதகு ஆளுநர் அவர்கள் தமது இசைவைத் தெரிவித்துள்ளார்கள்.

5. அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்)—தொடர்ச்சி

(உ) தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண் 4) சட்டமுன்வடிவு, 2019

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 2019 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண் 4) சட்டமுன்வடிவு, மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2019 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண் 4) சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்"

எனக் கோருகிறேன்.